இடைப்பாடி நகராட்சி ஆணையாளரின் செயல்முறை
ஆணை பிறப்பிப்பவர்: திரு.S.முஸ்தபா, B.Sc.,

ந.க.எண்.086/2024/அ2 **நாள்.14.08.2024**

பொருள்: மனைப்பிரிவு – இடைப்பாடி நகராட்சி – சின்னமணலி கிராமம் – நகரளவை வார்டு –E, பிளாக் –36, நகரளவை எண்–58/2–ல் 1.59 ஏக்கர் (அ) 6435.00 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய மனைப்பிரிவு அமைத்தல்– நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது – மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. திரு.கு.மாதையன், திரு.அ.முரளிகிருஷ்ணன் மற்றும் திரு.இ.சண்முகசுந்தரம் ஆகியோரின் இணையதள விண்ணப்பம் எண். 37PIO1NG, Dt:19/10/2023.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண். ROC No.SLM/37PIO1NG /16995/ 2023/ TCP, Dt: 02/12/2023.
3. எடப்பாடி சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 7486/2023 Dt:14.12.2023.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண். ROC No.SLM/37PIO1NG /16995/ 2023/ TCP, Dt: 21/12/2023. SWP/DTCP/SALEM/LAYOUT No.307/2023.
5. அரசு ஆணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ- 4(3) நாள் 04.05.2017.
6. இடைப்பாடி நகராட்சி கரூவூல பற்றுச்சீட்டு எண்.046/01/1/24-25/0002255 மற்றும் 046/01/1/24-25/0002256, நாள்.05.08.2024.
7. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இணையதள வழி மின் கட்டண இரசீது எண்.PGNINB40307034 மற்றும் PGCCAN638679904 , நாள்.05.08.2024 மற்றும் 01.06.2024.
8. இந்நகர்மன்ற தீர்மான எண்.647, நாள்.29.02.2024.
9. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019.
11. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.09.12.2020.
12. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.16.07.2022.

****

உத்தரவு:

இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட சின்னமணலி கிராமம், நகரளவை வார்டு –E, பிளாக் –36, நகரளவை எண்–58/2–ல் 1.59 ஏக்கர் (அ) 6435.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி பார்வை 1–இல் காணும் திரு.கு.மாதையன், திரு.அ.முரளிகிருஷ்ணன் மற்றும் திரு.இ.சண்முகசுந்தரம் ஆகியோரின் விண்ணப்பம், பரிசீலினை செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, உத்தேச மனைப்பிரிவிற்குரிய பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் பார்வை 3–

இல் கண்டுள்ள எடப்பாடி சார்பதிவாளர் அலுவலக ஆவணம் மூலம் இடைப்பாடி நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 4–இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/ DTCP/ SALEM/ LAYOUT No.307/2023 என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 5–இல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான உரிய கட்டணம் மற்றும் இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் பார்வை 6–இல் கண்டுள்ள செலுத்துச்சீட்டின் படி நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 7–இல் கண்டுள்ள செலுத்துச்சீட்டின் படி மேற்படி மனைப்பிரிவில் அமைக்கயுள்ள தெருவிளக்கு கம்பங்களுக்கான கட்டணம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. சின்னமணலி கிராமம், நகரளவை வார்டு –E, பிளாக் –36, நகரளவை எண்–58/2 என்ற இடத்தில் 1.59 ஏக்கர் (அ) 6435.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 8–ல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே சின்னமணலி கிராமம், நகரளவை வார்டு –E, பிளாக் –36, நகரளவை எண்–58/2 என்ற இடத்தில் 1.59 ஏக்கர் (அ) 6435.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 9–ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் கண்டுள்ள வழிகாட்டு நடைமுறைகள் மற்றும் பார்வை 10,11 மற்றும் 12–இல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளபடி சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி.

இணைப்பு

1. பார்வை 4–இல் கண்டுள்ள செயல்முறை உத்திரவு நகல் மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.

2. பார்வை 5,10,11 மற்றும் 12–இல் காணும் அரசாணைகள்.

பெறுதல்:

திரு.கு.மாதையன், திரு.அ.முரளிகிருஷ்ணன்,
மற்றும் திரு.இ.சண்முகசுந்தரம்,
98,நைனாம்பட்டி தெரு, வெள்ளாண்டிவலசு,
எடப்பாடி,சேலம் -637101.

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.
2. நகராட்சி பொறியாளர், இடைப்பாடி நகராட்சி (வரைபட நகல் மற்றும் தான சாசன நகலுடன்) மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலையினை சொத்துப்பதிவேடு மற்றும் சாலைகள் பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. வருவாய் ஆய்வாளர், இடைப்பாடி நகராட்சி (வரைபட நகலுடன்) மனைகளுக்கு காலியிடவரி விதிப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.
4. நகரமைப்பு ஆய்வாளர், இடைப்பாடி நகராட்சி பொது திறவிடம் ஒதுக்கீடு விபரத்தினை சொத்துகள் பதிவேட்டில் பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. சார்பதிவாளர், எடப்பாடி (வரைபட நகலுடன்)அவர்களுக்கு தகவலுக்காக.